*Tamilmanam – International Research Journal of Tamil Studies*
*An international, peer-reviewed academic journal*
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI · SJIF
Imapact Factor 3.5 · Monthly
தொகுதி 20, எண் 01 (2026) 20 01 2026 7–13

UGC Approved by Transparent Peer Review

RESEARCH ARTICLE

# ஆற்றுப்படை நூல்கள் வழி நிலம் பூத்து மலர்ந்த நாள் நாவல் ஓர் ஒப்பீடு

ஜோதி பூ[1,*], ராமலெட்சுமி சி[2]

[1] முழு நேரம் முனைவர் பட்ட ஆய்வாளர் வெ.ப.சு தமிழியல் ஆய்வு மையம், ம.தி.தா.இந்துக் கல்லூரி, திருநெல்வேலி-10. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம். திருநெல்வேலி-12.தமிழ்நாடு, இந்தியா
[2] உதவி பேராசிரியர், வெ.ப.சு தமிழியல் ஆய்வு மையம், ம.தி.தா.இந்துக் கல்லூரி, திருநெல்வேலி-10. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம். திருநெல்வேலி -12, தமிழ்நாடு, இந்தியா
*தொடர்பு ஆசிரியர்: ஜோதி பூ, tamilseminar12@gmail.com

**ARTICLE INFO**

**Article history**
Published: 1 October 2026

**Peer review**
Double-blind peer review

**Keywords**
அலைகுடி
இசைக்கலைஞர்கள்
பாணர்
கூத்தர்
விறலியர்
கபிலர் மற்றும் பறம்பு மலை
அதிகார அரசியலும் போரும்
ஐந்திணை வாழ்வியல்
யாழிசை மற்றும் பண்கள்

**ABSTRACT**

சங்க இலக்கியப் பத்துப்பாட்டுத் தொகுப்பில் அமைந்த 'ஆற்றுப்படை நூல்கள்' (பொருநர், சிறுபாண், பெரும்பாண், கூத்தராற்றுப்படை, திருமுருகாற்றுப்படை) கலைக் குழுவினரின் பயணத்தையும், கொடை மரபையும் பேசும் பிரதான இலக்கிய வடிவங்களாகும். மனோஜ் குரூர் எழுதி கே.வி. ஜெயஸ்ரீ தமிழாக்கம் செய்த 'நிலம் பூத்து மலர்ந்த நாள்' புதினம், இச்சங்க ஆற்றுப்படை மரபின் தொடர்ச்சியாகவும், அதேவேளையில் அதை நவீனப் புனைவுப் பார்வையில் மறுவாசிப்பு செய்யும் ஒரு மாற்று ஆவணமாகவும் திகழ்கிறது.

***Abstract***

**Keywords:** Itinerant Musicians / Bards; Panar; Koothar; Viraliyar; Kapilar and Parambu Malai; Power Politics and War; Five Landscapes / Thinai Life; Yazh and Ancient Tunes

**How to cite this article:** பூ, ஜோ., & சி, ரா. (2026). ஆற்றுப்படை நூல்கள் வழி நிலம் பூத்து மலர்ந்த நாள் நாவல் ஓர் ஒப்பீடு. *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *20*(01), 7–13. https://tamilmanam.in/article/ஆற்றுப்படை-நூல்கள்-வழி-ந/

**Copyright and licence:** © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

## முன்னுரை

'நிலம் பூத்து மலர்ந்த நாள்' நாவல் மலையாளத்தில் கவிஞரும் எழுத்தாளருமான மனோஜ் குரூர் அவர்களால் எழுதப்பட்டது. இதனைத் தமிழில் கே.வி. ஜெயஸ்ரீ மொழிபெயர்த்துள்ளார். நிலம் பூத்து மலர்ன்ன நாள் நாவலுக்காக கேரள சாகித்ய அகாதெமி விருது உள்ளிட்ட பல்வேறு முதன்மையான விருதுகளைப் பெற்றுள்ளார்.

இந்நாவலின் தமிழாக்கத்திற்காக (கே.வி. ஜெயஸ்ரீ செய்த மொழிபெயர்ப்பு) 2019-ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதெமி மொழிபெயர்ப்பு விருது கிடைத்தது குறிப்பிடத்தக்கது.சங்க கால மக்களின் வாழ்வியல் மற்றும் அவர்களின் தொன்மையான பண்பாட்டை நவீன மொழியோடு எடுத்துரைக்கும் ஒரு வரலாற்றுப் புனைவு நாவலாகும். பழந்தமிழ் சங்க இலக்கியப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு, கொம்பன் என்ற பாணர் குடும்பத்தினரின் பயணம், வறுமை மற்றும் கலை வாழ்வை விவரிக்கிறது.தமிழரின் தொன்மையான பண்பாடு சங்க காலப் பண்பாடு. இதனை எடுத்துக் கூறும் அகச் சான்று சங்க இலக்கியம். சங்க கால மக்கள் மனித வாழ்க்கையை இரண்டு பிரிவாகப் பிரித்துச் சிந்தித்துள்ளனர். ஆண் பெண் உறவைக் கூறுவது அக வாழ்க்கை என்றும் மன்னர்களின் போர் வீரம் பற்றிப் பேசுவது புற வாழ்க்கை என்றும் பதிவு செய்துள்ளனர். இந்த இலக்கியப் பதிவுகள் அக்கால மக்களின் எண்ண ஓட்டங்களை மன உணர்வுகளை வரலாற்றுப் பின்புலத்தை அறிந்து கொள்ள உதவுகின்றன. இத்தகைய பின்புலத்தைக் கொண்டு எழுதப்பட்ட நாவல் இது.சங்க இலக்கியத்தில் காணப்பெறும் 'ஆற்றுப்படை' எனும் தனித்துவமான இலக்கிய மரபையும், மனோஜ் குரூர் எழுதி கே.வி. ஜெயஸ்ரீ தமிழாக்கம் செய்த 'நிலம் பூத்து மலர்ந்த நாள்' புதினத்தையும் ஒப்பிட்டு நோக்கும்போது, இந்நாவல் ஆற்றுப்படை நூல்களின் நவீன வடிவமாகவும், அதேவேளையில் அதன் அமைப்பியல் மற்றும் கருத்து நிலைகளை மறுவாசிப்பு செய்யும் ஒரு படைப்பாகவும் திகழ்வதைக் காண முடிகிறது.

**நாவலின் முக்கியக் கதாபாத்திரங்கள்**

கபிலர்: பாரியின் தோழராகவும், அவனது இழப்புக்குப் பின் அவனது மகள்களைப் பாதுகாக்கும் பொறுப்பேற்கும் சங்கப் புலவராகவும் வருகிறார்.

கொலும்பன் குடும்பத்தினர்: மூத்த யாழிசைஞன் கொலும்பன், அவனது மகள் சித்திரை, மகன் மயிலன் ஆகியோரின் வாழ்க்கைப் பயணம் வழியே எளிய மக்களின் வாழ்வியலும் வறுமையும் வெளிப்படுகின்றன.

பாரி பிற மன்னர்கள்: கொடை வள்ளல் பாரி, தகடூர் அதியமான், ஏழிமலை நன்னன் ஆகியோர் நிலப்பரப்பு அதிகாரத்தின் பிரதிநிதிகளாக உலா வருகின்றனர்.

**சங்க ஆற்றுப்படை மரபும் நாவலின் புதுமையும்**

வழிகாட்டும் மரபின் மாற்றம்: பழந்தமிழ் ஆற்றுப்படை நூல்களில் (எ.கா. சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை) ஒரு பாணன் பரிசில் பெற்றுத் திரும்பும்போது, எதிரே வரும் வறுமையுற்ற மற்றொரு பாணனுக்கு "அவ்வள்ளலிடம் செல்; உன் வறுமை தீரும்" எனப் பாதையைக் காட்டுவது மரபு. ஆனால், இந்நாவலில் முறையான வழிகாட்டுதல்கள் அற்ற, போரினாலும் பஞ்சத்தினாலும் நிலைகுலைந்த ஒரு சமூகத்தில் அலைந்து திரியும் கலைஞர்களின் நிலையற்ற வாழ்க்கை சித்தரிக்கப்படுகிறது.

ஆற்றுப்படை நூல்கள் கொடை வள்ளல்களையும் மன்னர்களையும் ஈகை குணமுடையவர்களாகக் போற்றுகின்றன. இந்நாவலோ, மன்னர்கள் வழங்கும் பரிசில்கள் என்பது அவர்களின் சுயதம்பட்டத்திற்காகவும், புலவர்களையும் கலைஞர்களையும் தங்களின் அதிகாரத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதற்காகவுமே வழங்கப்படுகின்றன

**அரசன் பெருந் திறமுள்ளவன். இரக்கமுள்ளவனும்தான் ஒரு நாளில் எண்தேர் செய்யும் தச்சன் முப்பது நாட்களில் செய்த தேர்க்கா போன்றவன் அதியமான் நெடுமானஞ்சி சிறந்த தேருக்கு வழியைப் பற்றி யோசிக்கத் தேவையில்லை அல்லவா? ஒருமுறை அஞ்சி வேட்டையாடக் காட்டிற்குச் சென்றபோது அரிதான ஒரு நெல்லிக்களி அவனுக்குக் கிடைத்திருக்கிறது. உயிர் மருந்து போன்ற சிறப்புடைய அதை வேறு யாருக்கும் கொடுக்காமல் என்னிடம் தந்தான் குழந்தையின் குரலுக்குத் தெளிவில்லை என்றாலும்**

**அது உள்ளத்தில் இனிமை உண்டாக்குமெனில் அதற்குக் காரணம் அக்குழந்தையிடம் காணும் அன்பன்றி வேறென்ன? அதுபோலவே என் பாடல்களோடு அஞ்சி கனிவு காட்டினான்""**

**இந்த அவ்வை என்னவெல்லாம் சொல்கிறார்! சற்றுமுன் தன் சொற்களின் வலிமையில் பெருமிதம் கொண்டார் அரசனிடமிருந்துஒரு பரிசு கிடைத்ததைப் பற்றிச் சொல்லும்போது, தன் பாட்டுகளை வெறும் குழந்தைத்தனமென்று தரம் தாழ்த்துகிறார்! (நி.பூ.ம.நா.210-211)**

என்ற கசப்பான அரசியலை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

**நிலவியல் மற்றும் திணை வாழ்வியல்**

சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய நூல்களில் பாடப்படும் நிலப்பரப்புகளின் இயற்கைச் சூழலும், மக்களின் உணவுப் பழக்கவழக்கங்களும் நாவலில் விரிவாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆற்றுப்படைச் சான்று: ஆற்றுப்படை நூல்கள் ஒவ்வொரு திணையின் வழிச்செல்வதையும், ஆங்காங்கே கிடைக்கும் உணவுகளையும் (எ.கா. எயினர் தரும் கள்ளும் இறைச்சியும், அந்தணர் தரும் சோறும்) விவரிப்பது போலவே, இந்நாவலிலும் கொலும்பனின் குடும்பம் கடந்து செல்லும் திணை நிலங்களின் இயற்கையும் உணவுகளும் கவித்துவமாக விவரிக்கப்படுகின்றன.

பறம்பு மலையின் வீழ்ச்சி: பாரியின் பறம்பு மலையை மூவேந்தர்கள் முற்றுகையிட்ட நிகழ்வு புறநானூற்றில்

**“அளிதோதானே, பாரியது பறம்பே!**

**நளி கொள் முரசின் மூவிரும் முற்றினும்,**

**உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே:**

**ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல் விளையும்மே;**

**இரண்டே, தீம் சுளைப் பலவின் பழம் ஊழ்க்கும்மே;**

**.....**

**வருந்தா யாணர்த்து; நந்தும்கொல்லோ**

**இரும் பல் கூந்தல் மடந்தையர் தந்தை**

**ஆடு கழை நரலும் சேட் சிமை, புலவர்**

**பாடி ஆனாப் பண்பின் பகைவர்**

**ஓடு கழல் கம்பலை கண்ட**

**செரு வெஞ் சேஎய் பெரு விறல் நாடே!”**

(புற.பா 109-120) பதிவு செய்யப்பட்டுள்ளது. நாவலில் இந்த முற்றுகை என்பது வெறும் இராணுவ நடவடிக்கை அல்ல; மாறாக, இயற்கையோடு இயைந்து வாழ்ந்த ஒரு சமூகத்தின் மீதும், அவர்களின் சுயாட்சி மீதும் பேரரசுகள் நடத்திய தாக்குதலாக விவரிக்கப்படுகிறது.

நன்னனின் முரண்பாடு: ஏழிமலை நன்னன் பெண் கொலை புரிந்த கொடூரன் என நற்றிணையில்

**“பொரு இல் ஆயமோடு அருவி ஆடி,**
**நீர் அலைச் சிவந்த பேர் அமர் மழைக் கண்**
**குறியா நோக்கமொடு முறுவல் நல்கி,**
**மனைவயின் பெயர்ந்த காலை, நினைஇய**
**நினக்கோ அறியுநள் நெஞ்சே! புனத்த”**

(பாடல் 44) கூறப்படும் வரலாற்றுச் சான்றை நாவல் நுட்பமாகப் பயன்படுத்துகிறது. மன்னர்களின் கொடைத் தன்மைக்கு பின்னே ஒளிந்திருக்கும் மூர்க்கத்தனத்தையும், எளிய மக்களின் உயிர்கள் மீதான அலட்சியத்தையும் உணர்த்த நன்னனின் பாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது

**இசைக்கருவிகளும் கலை வாழ்வும்**

யாழின் வடிவமைப்பு: ஆற்றுப்படை நூல்களில் (குறிப்பாக பொருநராற்றுப்படை) சீறியாழ் மற்றும் பேரியாழின் அமைப்பும், அவற்றின் உறுப்புகளும் (பத்தர், கோடு, நரம்பு) மிக நுட்பமாக வருணிக்கப்பட்டிருக்கும்.

நாவலின் அணுகுமுறை: இந்நாவலிலும் கொலும்பன் யாழ் செய்யும் முறை, அதன் மரத்தைத் தேர்ந்தெடுப்பது, நரம்புகளைச் சுருதி கூட்டுவது ஆகியவை ஆற்றுப்படை நூல்களின் தரவுகளோடு இயைந்து விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஒரு யாழ் உருவாக்கப்படுவதற்குப் பின்னால் உள்ள உழைப்பு, மரத்தைத் தேர்ந்தெடுக்கும் கலை, விலங்கின் நரம்பைப் பதப்படுத்தி யாழில் கட்டுதல் போன்ற நுட்பங்கள் நாவலில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. கலைக்கருவி என்பது ஒரு கலைஞனின் உடலின் தொடர்ச்சியாகவே நாவலில் சித்தரிக்கப்படுகிறது.

**பகல் வெளிச்சத்தை மறைத்து வானில் மழைமேகங்கள் திரண்டிருந்தன இழுத்து முறுக்கப்பட்ட முழவுகளும், ஆகுளிப் பறைகளும் ஒன்றிணைந்து முழங்கியது போன்ற இடிமுழக்கங்கள் மின்னல் கீற்றுகளின் வெளிச்சம் இடையிடையே இலைத்தாளங்களில் வந்து உரசியது கைகளிலும் கன்னங்களிலும் கண்களிலுமாகப் பட்டுத் தெறித்து அது மீண்டும் பல்வேறு வடிவங்களாகச் சிதறியது. மயிலிறகு பதித்த பேரியாழ் உயர்ந்ததும்பிக்கை போன்ற கொம்புகள் மூங்கிலின் கணுக்களின் இடைவெளிகளில் துளைக்கப்பட்ட சிறுதுளைகள் மேலும் தீங்குழல்கள் வாய் இறுக்கமுள்ள எல்லரிப்பறைகள். பதலப்பறைகள் நரம்புகளை நெகிழ வைத்த யாழ்களையும், மற்ற கருவிகளையும் பல மூட்டைகளாகக் கம்பின் இருபுறமும் கட்டி, தோளிலேற்றிக் கொண்டோம். ஆட்டத்திற்கான எல்லரியும், ஆகுளியும், தட்டையும் குழலும் ஒருபுறமும் முழவும், தூம்பும் மறுபுறமுமாக மாராப்புத்துணியால் கட்டிக்கொண்டு கூத்தரும் எங்களுடன் இணைந்து கொண்டனர். (நி.பூ.ம.நா .26)**

இசை என்பது வெறும் பொழுதுபோக்கல்ல; அது கலைக்கலைஞர்களின் ஆன்மா மற்றும் வாழ்வியல் அடையாளம் என்பது நாவலில் வெளிப்படுகிறது.

நாவலில் இசை என்பது வெறும் அரசவைக்கலை அல்ல; அது நிலத்தினுடையக் குரல். பாணர்கள் யாழில் உருவாக்கும் ஒவ்வொரு பண்ணும் (இராகமும்) அவர்கள் வாழும் திணை நிலத்தின் இயற்கை ஓசைகளிலிருந்தே (காற்றின் ஒலி, அருவியின் ஓசை, விலங்குகளின் ஒலி) பெறப்படுகிறது.

**பெண்களின் நிலை மற்றும் சமூக பாத்திரம்**

விறலியரின் வாழ்வியல்: சங்க இலக்கியங்களில் ஆடல் மகளிராகவும் விறலியராகவும் காட்டப்படும் பெண்கள், இந்நாவல் அவர்களைத் திறம்பட இசை மற்றும் நடனக் கலையைக் காக்கும் கலைஞர்களாகவும், குடும்பத்தின் பொருளாதாரத் தூண்களாகவும் காட்டுகிறது. நாவலில் சமூகத்தின் கொடூரமான சுரண்டலுக்கு ஆளாகும் எளிய மனிதர்களாக உருப்பெறுகின்றனர்.

சித்திரையின் பாத்திரம் கொலும்பனின் மகள் சித்திரை, அலைகுடிப் பெண்களின் துயரத்திற்கும், அதேவேளையில் அவர்களின் வாழ்வியல் உறுதிக்கும் (Resilience) சான்றாக விளங்கினாள்.

அரச அதிகாரமும் ஆண்மைய சமூகமும் பெண்களை எவ்வாறு கையாள்கின்றன என்பதை நாவல் சித்திரையின் வழியே காட்டுகிறது.

**பாரியைக் கொன்ற சேர நாட்டிற்கா? கபிலருடன் வேள்பாரியின் பெண்மக்களும் இருக்கின்றனரா? அவர்களின் திருமணம் முடிந்துவிட்டதா? அரசரைக் கொன்றது மூவேந்தருள் ஒருவரென்றால், அவர்களுள் ஒருவர் நாட்டுக்குக் கபிலர் போவாரா? அவர் போனாலும் அந்தப் பெண்மக்கள் போவார்களா?"**

**விடவேண்டாம்**

**எனக்கு ஒன்றும் புரியவில்லை பெரும்பாணன் சிரித்தார்**

**சென்றுவிட்டேன் சற்றுநேரத்தில்**

**பாவலர்களுக்கு அப்படியெல்லாம் இல்லை மகளே அரசர்க்குப் புகழ் வேண்டும் புகழபாட புலவர் வேண்டும் என்று பரணர் சொன்னது உனக்கு நினைவில் இல்லையா? மறுபடியும் சொல்கிறேன் புலவர்களுக்குப் பொருள் வேண்டும். அதைக் கொடுக்க அரசன் வேண்டும். ஒரு மன்னன் இல்லையென்றால் வேறொரு மன்னன் அவ்வளவுதான். நம் முன்னோரை வீழ்த்திய சேரனிடம் போகத்தானே நாமும் இப்போது அவசரப்படுகிறோம்? அதிருக்கட்டும் அந்தப் பெண்பிள்ளைகள்தான் யாருமற்றுப் போனார்கள். கபிலர் அவர்களை அழைத்துக் கொண்டு பல குறுநில மன்னர்களையும் சந்தித்திருக்கிறார். அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பணிந்து கேட்டிருக்கிறார் மூவேந்தர்களுக்கு பயந்து அவர்கள் யாரும் அதற்குத் தயாராகவில்லை போலிருக்கிறது. கடைசியில் அவர்களைத் திருக்கோவிலூர் அந்தணரிடம் ஒப்படைத்திருக்கிறார்" ( நி.பூ.ம.நா 178-179)**

அங்கவை, சங்கவை சித்தரிப்பு: பாரியின் மகள்கள் வெறும் அனாதைகளாகவோ அல்லது யாசகம் கோருபவர்களாகவோ காட்டப்படாமல், பறம்பு மலையின் இயற்கை வளத்தையும் தங்களின் அடையாளத்தையும் இழந்து தவிக்கும் வரலாற்று சாட்சியங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளனர்.

**உணவும் திணை சார்ந்த வாழ்வியலும்**

**உணவுப் பண்பாடு:** சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய நூல்களில் பாடப்படும் நிலப்பரப்புகளின் இயற்கைச் சூழலும், மக்களின் உணவுப் பழக்கவழக்கங்களும் நாவலில் விரிவாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஐந்து திணைகளுக்கும் உரிய பிரத்யேக உணவுப் பழக்கவழக்கங்கள் நாவலில் குறிஞ்சி நிலத்தின் தேனும் திணையும், பாலை நிலத்தின் வறட்சியான உணவும், மருத நிலத்தின் செழிப்பான உணவுகளும் மக்களின் வறுமையோடும் செழிப்போடும் பிணைத்துக் காட்டப்படுகின்றன.

**அடுத்து எங்களுக்கான முறை. அரிசியிலிருந்து வடித்தெடுத்த சாராயமும், சோறும், வேக வைத்த உடும்பு இறைச்சியும், சுட்டெடுத்த பன்றியிறைச்சியுமே எங்கள்முன் அணிவகுத்தன. அதுவரை முரண்டு கொண்டிருந்த குடல்கள், இரைகளை ஒவ்வொன்றாய் எடுத்தெடுத்து உள்நீருக்குள் எறிந்தன அதன் வெளிப்பாடுகளைக் கண்டு குழந்தைகள் சிரித்தனர். உயிர் நிலைநிற்பதற்கான ஒரேயொரு மருந்து எதுவென்பதை மேலும் ஒருமுறை உணர்ந்து கொண்டோம்.**

**( நி.பூ.ம.நா.29)**

இயற்கை அழிவு வேளிர்களின் மலைகளை மூவேந்தர்கள் கைப்பற்றும்போது ஏற்படும் இயற்கை வளச் சுரண்டலும், காடுகள் அழிக்கப்படுவதும் நவீனச் சூழலியல்

(Eco-criticism) பார்வையில் சுட்டிக்காட்டத்தக்கவை.

ஆற்றுப்படை நூல்கள் ஒவ்வொரு திணையின் வழிச்செல்வதையும், ஆங்காங்கே கிடைக்கும் உணவுகளையும் (எ.கா. எயினர் தரும் கள்ளும் இறைச்சியும், அந்தணர் தரும் சோறும்) விவரிப்பது போலவே, இந்நாவலிலும் கொலும்பனின் குடும்பம் கடந்து செல்லும் திணை நிலங்களின் இயற்கையும் உணவுகளும் கவித்துவமாக விவரிக்கப்படுகின்றன.

**விருந்தினர்களான குடில்களின் முன்னர் நெருப்பு மூட்டினர் மூங்கில் குவளைகளில் எங்களுக்காக அவர்கள் அதை விலக்கி வைத்தனர். எயினர்கள் தேனிலிருந்து காய்ச்சி எடுக்கப்பட்ட கடுமையான தேறல் நுரைத்துத் ததும்பியது. முள்ளம்பன்றி இறைச்சியையும் நெய்ச்சோற்றையும்எங்கள்முன் பரிமாறினர். கையிலிருப்பவை அனைத்தையும் அவர்கள் அள்ளித் தருகின்றனர். எங்கள் கண்கள் நிறைந்தன. புகலிடம் தந்தவர்களின் கனிவிற்குப் பதிலாகக் கொடுக்க, எதையோ தேடி நாங்கள் எங்கள் மூட்டைகளை அவிழ்த்தோம் (நி.பூ.ம.நா.30-31)**

**போர் மற்றும் பேரழிவு**

வெற்றியின் பின்னுள்ள சோகம்: வரலாற்று நாவல்கள் பொதுவாகப் போரின் வெற்றியைக் கொண்டாடுகின்றன. ஆனால் இந்நாவல், போருக்குப் பிந்தைய பேரழிவையும் மக்களின் வடுக்களையும் பேசுகிறது.

பறம்பு மலையின் அழிவு சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்களின் கூட்டுப் படையெடுப்பால் பறம்பு மலை சுட்டெரிக்கப்படும்போது, அங்குள்ள அரிதான மூலிகைகள், விலங்குகள், மரங்கள் மற்றும் மக்களின் வாழ்வாதாரங்கள் அழியும் காட்சி, நவீனச் சூழலியல் பேரழிவை (Ecological Crisis) நினைவூட்டுகிறது.

**ஆற்றுப்படையின் மறுவாசிப்பு (Critical Shift)**

புகழுரைக்கு எதிரான நிதர்சனம்: ஆற்றுப்படை நூல்கள் மன்னர்களின் கொடையையும் வீரத்தையும் உயர்த்திப் பாடி, மன்னர்களை மையப்படுத்துகின்றன. ஆனால் இந்நாவல், மன்னர்களின் அதிகாரப் போட்டியினாலும் போர்களினாலும் எளிய கலைஞர்கள் சந்திக்கும் பேரழிவையும் வறுமையையும் முதன்மைப்படுத்துகிறது.

பரிசில் வாழ்க்கையின் கசப்பு மன்னர்களிடம் பரிசில் பெறுவது என்பது ஒரு கௌரவமாக சங்கப் பாடல்களில் காட்டப்பட, இந்நாவலில் அது கலைஞர்களின்

சுயமரியாதையைச் சுரண்டும் ஒரு நிலப்பிரபுத்துவ அமைப்பாகவும், நிலையற்ற வாழ்வாதாரமாகவும் காட்டப்படுகிறது.

கபிலரின் மனசாட்சி குறிஞ்சிப்பாட்டு மற்றும் புறநானூற்றுப் பாடல்களைப் பாடிய கபிலர், போருக்குப் பின் அடையும் குற்றவுணர்ச்சியும், அரசர்களின் புகழைப் பாடியதன் பின்னுள்ள

கசப்பான உண்மைகளை உணர்வதும் ஆற்றுப்படை மரபின் மீதான ஒரு விமர்சனப் பார்வையாகவே நாவலில் அமைகிறது.

### மொழிபெயர்ப்பின் நுட்பமும் சவால்களும்

மலையாள மூலத்திலிருந்து தமிழுக்கு: மனோஜ் குரூர் மலையாளத்தில் எழுதியபோது, பழமையான மலையாளச் சொற்களையும் சங்கத் தமிழின் தாக்கத்தையும் கலந்து எழுதினார்.

கே.வி. ஜெயஸ்ரீயின் பங்களிப்பு: தமிழாக்கத்தில் கே.வி. ஜெயஸ்ரீ அவர்கள் செயற்கையான பழந்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தாமல், வாசிப்புக்கு எளிமையாகவும் அதேநேரத்தில் சங்க காலத்தின் தொன்மை மாறாமலும் உரைநடையை அமைத்துள்ளார். இத்தகைய நுட்பமான மொழிபெயர்ப்பு உத்தியே அவருக்கு 2019-ஆம் ஆண்டின் சாகித்ய அகாதமி மொழிபெயர்ப்பு விருதைப் பெற்றுத் தந்தது.

### முடிவுரை

கே.வி. ஜெயஸ்ரீயின் தமிழாக்கத்தில் வெளிவந்த நிலம் பூத்து மலர்ந்த நாள், சங்க கால ஆற்றுப்படை நூல்களின் அழகியலையும் நிலவியல் தரவுகளையும் அப்படியே எடுத்துக்கொண்ட போதிலும், அவற்றின் உள்ளடக்கத்தை 'கீழிருந்து எழுதப்பட்ட வரலாறு' (History from Below) என்ற கோணத்தில் மறுவாசிப்பு செய்கிறது சங்க இலக்கியங்களைப் பற்றிய நமது மரபுசார்ந்த பார்வையை உடைத்து, நவீன வரலாற்றுப் புனைவுக்கான புதிய வாசலைத் திறந்து வைக்கிறது. மன்னர்களின் புகழ்பாடும் வரலாற்றை ஒதுக்கிவிட்டு, வரலாற்றின் நிழல்களில் மறைந்துபோன எளிய இசைக்கலைஞர்கள், பாணர்கள் மற்றும் பெண்களின் குரலாக இந்நாவல் ஒலிக்கிறது.

### துணைநூல் பட்டியல்

காமுத்துரை. ம, குதிப்பி, டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை - 600 078. முதல் பதிப்பு : நவம்பர் 2019.

காமுத்துரை. ம, மில், டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ், ரோஹிணி பிரிண்டர்ஸ், சென்னை - 600 078. முதல் பதிப்பு : மே 2010.

காமுத்துரை. ம, கலவை, விகடன் பிரசுரம், சென்னை - 600 002. முதல் பதிப்பு : டிசம்பர் 2023.

காமுத்துரை. ம. கடசல், எழுத்து பிரசுரம், சென்னை - 600 040. முதல் பதிப்பு : டிசம்பர் 2021.

சக்திவேல். சு, நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 600 108. நான்காம் பதிப்பு : டிசம்பர் 2016.

சண்முகசுந்தரம். சு, நாட்டுப்புற இயல், காவ்யா வெளியீடு, சென்னை - 600 024. ஐந்தாம் பதிப்பு : டிசம்பர் 2013.